www.testpapersfree.com

PAPER - 15

**605 / 15**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள் - A15



பெயர் : ______________________

வகுப்பு : ______________________

தேதி : ______________________

/ 90




பெற்றோர் கையொப்பம் : ______________________

**A1 வேற்றுமை**

**Q1** முதல் **Q5** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்

[Type here]

www.testpapersfree.com

PAPER - 15

**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. கருணையுள்ளம் கொண்ட அரசர் தவறு செய்த ____________ மன்னித்தார்.

(1) வாலிபனிடம்
(2) வாலிபனுக்கு
(3) வாலிபனை
(4) வாலிபனுடன் ( )

Q2. சிறுவர்கள் ____________ சென்று கல்வி கற்பது மிகவும் அவசியம்.

(1) பள்ளிக்கு
(2) பள்ளியில்
(3) பள்ளியோடு
(4) பள்ளியின் ( )

Q3. மாறனின் குடும்பத்தினர் அவனுடைய தந்தையின் பிறந்தநாளை ____________ கொண்டாடினார்.

(1) குதூகாலத்துடன்
(2) குதூகாலத்தால்
(3) குதூகாலத்தை
(4) குதூகாலத்தில் ( )

Q4. தீவிரவாதியின் கொடூரமான ____________ பலர் உயிரிழந்தனர்.

(1) செயலால்
(2) செயலை
(3) செயலுக்கு
(4) செயலில் ( )

Q5. ____________ கொட்டிய மழையை கோபு மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

(1) வானத்தை
(2) வானத்துக்கு
(3) வானத்தில்
(4) வானத்திலிருந்து ( )

**A2 செய்யுள் / பழமொழி**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

Q6. ஒன்றுபட்டால் உண்டு __________.

(1) இன்பம்
(2) லாபம்
(3) வாழ்வு
(4) வெற்றி

( )

Q7. காலத்தி னாற்செய்த __________ சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) உதவி
(2) நன்றி
(3) நன்மை
(4) அறம்

( )

Q8. __________ பொன் போன்றது.

(1) பணம்
(2) கல்வி
(3) நேர்மை
(4) காலம்

( )

Q9. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் __________ தரும்.

(1) வேதனையை
(2) கசப்பை
(3) இடும்பை
(4) கவலையை

( )

Q10. கற்க கசடற __________ கற்றபின்
நிற்க அதற்குத் தக.

www.testpapersfree.com



(1) சொன்னவை
(2) கேட்டவை
(3) பார்த்தவை
(4) கற்பவை ( )

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. மாறன் இளநீரை __________ தென்னை மரத்திலிருந்து பறித்தான்.

(1) பெரிதாக
(2) உயரமான
(3) இளமையாக
(4) அடர்ந்த ( )

Q12. பாட்டி __________ கதை சிறுவர்களை ஈர்த்தது.

(1) சொல்லும்
(2) சொன்ன
(3) சொல்ல
(4) சொல்லி ( )

Q13. கவிதா __________ பாடல் எல்லோரையும் கவர்கிறது.

(1) பாடிய
(2) பாடும்
(3) பாடுகிற
(4) பாடி ( )

Q14. திருமதி மாலா __________ ரோஜா மலர் ஒன்றைத் தன் கூந்தலில் சூடினார்.

(1) வாடிய
(2) மிருதுவாக
(3) சிறிதாக
(4) அழகான ( )

www.testpapersfree.com



Q15. எறும்புகள் தரையில் சிதறிக் கிடந்த உணவுத் துண்டுகளை ____________ தூக்கிச் சென்றன.

(1) வெறுப்பாக
(2) சுறுசுறுப்பாக
(3) மகிழ்ச்சியான
(4) ஒற்றுமையான

( )

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

கருணையுள்ளம் கொண்ட அரசர் ஒருவர் தனது அமைச்சரவையில் உள்ளவர்களுக்குப் வெகுமதிகள் வழங்க முடிவெடுத்தார். மாலையில் அரச **(Q16)** ____________ நடுவில் அற்புதமான பொருள்களைக் குவித்து வைத்தார். பிறகு அவரது அவையோரை அழைத்து **(Q17)** ____________ பொருள்களை எடுத்துகொள்ளச் சொன்னார் . அமைச்சர்கள் விரைந்து சென்று தேவையான பொருள்களை குதூகலத்துடன் எடுத்துக்கொண்டனர். அப்போது தெனாலிராமன் மண்டபத்திற்குள் (Q18) ____________ . மேசையில் காலியான ஒரு வெள்ளித்தட்டு மட்டும்தான் இருந்தது. அதை தெனாலிராமன் பட்டுத்துணியால் மூடினார். இந்த வினோத செயலுக்கு என்ன **(Q19)** ____________ என்று அரசர் கேட்டார். அதற்கு தென்னாலிராமன் , "உங்கள் **(Q20)** ____________ காப்பாற்றவே இப்படிச் செய்தேன். நான் வெறும் தட்டைப் பரிசாக எடுத்துச் சென்றால், அரசரிடம் செல்வமில்லையோ என மக்கள் நினைக்கலாம் ," என்றார். "ஆஹா ! என் பெயரை காப்பாற்ற நினைக்கும் உனக்கு எனது முது மாலையைப் பரிசாகத் தருகிறேன்," என்றார் அரசர்.

Q16. (1) கோடியின்

(2) மண்டபத்தின்

www.testpapersfree.com

PAPER - 15

(3) அறையின்

(4) அறியணையின் ( )

Q17. (1) விருப்பமான

(2) சுலபமான

(3) கனமான

(4) பொருத்தமான ( )

Q18. (1) கிளம்பினார்

(2) வெளியேறினார்

(3) மறைந்தார்

(4) நுழைந்தார் ( )

Q19. (1) காரணம்

(2) பதில்

(3) வேடிக்கை

(4) விளைவு ( )

Q20. (1) நாட்டை

(2) வீட்டை

(3) பெருமையை

(4) செல்வதை ( )

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

ஓர் அரசனின் அவையில் மல்லன் ஒருவன் இருந்தான். அவன் மல்யுத்தம் புரிவதில் வல்லவனாக விளங்கினான். அவன் மிகப் பெரிய உடற்கட்டும் நல்ல பலமும் உடையவனாக இருந்தான். ஒரு முறை அவனுக்கு ஓர் எண்ணம் உதயமானது. தான் இறந்துபோனால் தனது விதையும் தன்னுடன் அழிந்து போய்விடுமோ என அஞ்சினான். எனவே, தனது விதையை யாரேனும் ஒரு சிலருக்காவது கற்றுத் தரவேண்டுமென விரும்பினான். அதன்பின் ஓர் அறிவிப்பைச் செய்தான்.

மறுநாள் பலர் வந்து அவனைக் கண்டனர். அவர்களுக்கு மல்யுத்த பயிற்சி கொடுக்கப்பட்டது. சீடர்கள் அனைவரும் விதையை நன்கு பயின்றனர். ஆனால், அவர்களில் கோவிந்தன் என்னும் சீடன் மட்டும் மற்றவர்களை விட மிகத் திறமையாக வித்தையைக் கற்றுத் தேர்ந்தான். அதனால், மல்லனுக்குக் கோவிந்தன் மீது தனி அன்பு ஏற்பட்டது. கோவிந்தனுக்குத் தான் அறிந்த எல்லா வித்தைகளையும் கற்பித்து அவனைத் தனக்கு நிகராக ஆக்கினான். அதனால், கோவிந்தன் தான் எல்லாவற்றையும் கற்றுவிட்ட இறுமாப்பில் இருந்தான். அவனது அகம்பாவம் அவனை

www.testpapersfree.com



ஆட்டிப் படைக்க ஆரம்பித்தது. தனது குருவான மல்லனையே ஒரு முறை தன்னுடன் போட்டியிட அழைத்தான்.

இது மல்லனுக்கு அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. ஏனெனில், கோவிந்தனோ இளைஞன். மல்லனுக்கோ வயதாகிவிட்டது. மல்லனின் கவலையை உணர்ந்த அவனது சகோதரி அவனுக்கு ஓர் ஆலோசனை கூறினாள். அதன்படி மல்லனும் போரிடாச் சென்றான். போகும்போது ஒரு கையில் அகப்பையையும் மற்றொரு கையில் பானையின் முடியையும் எடுத்துச் சென்றான். அந்த ஆயுதங்களை ஏந்தி வந்த மல்லனைப் பார்த்து கோவிந்தன் வியந்தான். இந்த ஆயுதங்களைக் கொண்டு மல்லன் தன்னைப் புதிய முறையில் தாக்கப் போகிறான் என்று அச்சம் கொண்டான் கோவிந்தன். இப்புதிய கலையைப் பயில்வதற்கு முன்னதாகவே குருவைப் போட்டிக்கு அழைத்துவிட்டதை நினைத்து வருந்தினான். தன் குருவின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டான். மல்லனுக்கோ மட்டில்லா மகிழ்ச்சி தாண்டவமாடியது. இருப்பினும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தான்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 8 மதிப்பெண்கள் )**

Q21. மல்லன் ஏன் தன் விதையைச் சிலருக்காக கற்றுக் கொடுக்க விரும்பினான்?

(1) தன் வித்தைகள் தன்னுடன் அழிந்துவிடும் என்பதால்
(2) தான் ஒரு மல்யுத்த குருவாக வேண்டும் என்பதால்
(3) மல்யுத்தக் காலை அழிந்துவிடும் என்பதால்
(4) வித்தையைக் கற்றுக்கொடுக்கும் படி அரசன் கட்டளையிட்டதால் ( )

Q22. கோவிந்தன் மல்லனின் அன்பைப் பெற்றதற்கு காரணம் என்ன?

(1) மல்லன் கோவிந்தனைத் தனக்கு நிகராக உருவாக்கியதால்
(2) கோவிந்தன் மற்ற சீடர்களை மல்யுத்தத்தில் வென்றதால்
(3) கோவிந்தன் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததால்
(4) கோவிந்தன் மிகச் சிறந்த மாணவனாக இருந்ததால் ( )

Q23. கோவிந்தன் கர்வம் நிறைந்தவன் என்பது எப்படிப் புலப்படுகின்றது?

www.testpapersfree.com



(1) அவன் மல்லனை அதிர்ச்சியடைய செய்ததால்
(2) அவன் மல்லனைப் போட்டிக்கு அழைத்ததால்
(3) அவன் மல்லனை அச்சுறுத்தியதால்
(4) அவன் மல்யுத்தக்கலையை முழுமையாகக் கற்றுவிட்டதால் ( )

Q24. மல்லன் எதனால் கோவிந்தனை எண்ணி பீதி அடைந்தான்?

(1) கோவிந்தன் எல்லா வித்தைகளையும் கற்றிருப்பதால்
(2) சீடர்கள் தனக்கு மரியாதை காட்டாததால்
(3) கோவிந்தன் மல்லனுக்கு நிகராக இல்லாததால்
(4) மல்லனுக்கு வயது முதிர்ந்துவிட்டதால் ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. உதயமானது

(1) வெடித்தது
(2) தொடங்கியது
(3) தோன்றியது
(4) பளிச்சிட்டது ( )

<u>C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 8 மதிப்பெண்கள் )**

www.testpapersfree.com

PAPER - 15

| | | |
|---|---|---|
| Q26. | மாணவர்கள் ____________ நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். அதன் பின் வர்கள் அதை பற்றியே பேசினர். | Q26 ( ) |
| Q27. | அம்மா விருந்துக்குத் தேவையான ____________ பொருள்களையும் சந்தைக்குச் சென்று வாங்கி வந்தார்.அவர் முதலில் அடுப்பில் பானையை வைத்து சமயலைத் தொடங்கினார். | Q27 ( ) |
| Q28. | வேடன் வேட்டையாட காட்டிற்குச் சென்றான். அவன் அங்குள்ள மிருகங்களைக் குறி தவறாமல் ____________ எய்து கொன்றான். | Q28 ( ) |
| Q29 | மீனவன் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடித்தான். அவன் தான் பிடித்த மீன்களை ____________ உள்ள சந்தையில் விற்றான். | Q29 ( ) |

| | |
|---|---|
| (1) அக்கரையில் | (5) அக்கறையில் |
| (2) பானம் | (6) பாணம் |
| (3) அணைத்து | (7) அனைத்து |
| (4) கலை | (8) களை |

<u>D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

[Type here]

www.testpapersfree.com



## தொலைக்காட்சி நாடங்கங்களில் தோன்றி நடிக்க ஆர்வமுள்ளோரை அழைக்கின்றோம்!!!!







சின்னத்திரையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் "மாதுரி" நாடகப் புகழ் ரவியுடன் தோன்றி நடிக்க ஓர் - அறிய வாய்ப்பு – அதை நீங்கள் நழுவ

- புதுமுகங்களை மட்டுமே விண்ணப்பிக்க அழைக்கின்றோம்
- 16 முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது அவசியமாகும்
- நடிப்பில் மிகுந்த ஆர்வம் இருக்கவேண்டும்
- தமிழில் சரளமாகப் பேச கூடியவர்களாக இருக்கவேண்டும்

நீங்கள் தயார் என்றால் உங்களை நாங்களும் சந்திக்கத் தயார். நீங்கள் அடையாள அட்டையோடு நேர்முகத் தேர்வுக்கு வரவும்.
தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இலவச நடிப்புப் பட்டறையில் நடிப்பின் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள அனுப்பப்படுவார்கள். சிறப்பாகத் தேர்ச்சி பெறுவோருக்குப் புத்தம் புதிய நாடகத் தொடரில் நடிக்க வாய்ப்புகள் உண்டு.

15 ஜெண்டிங் சாலை
#07 - 04
சிங்கப்பூர் - 517769

மேல்விவரங்கள் அறிய துணை தயாரிப்பாளர்கள் திரு. கண்ணன் (9230909) அல்லது திரு. வாணன் (87986758) அவர்களுடன் உடனே தொடர்பு கொள்ளவும்.

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன்

www.testpapersfree.com



எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)

Q30. எது ஒரு அறிய வாய்ப்பாக கருதப்படுகிறது?

(1) தொலைக்காட்சியில் தோன்றி நடிப்பது
(2) நடிப்பு பட்டறையில் கலந்துகொள்வது
(3) புகழ்பெற்ற நடிகருடன் சேர்ந்து நடிப்பது
(4) நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவது ( )

Q31. யார் இந்த நேர்முகத் தேர்வுக்கு வரத் தகுதி பெறாதவர்?

(1) தமிழில் சரளமாகப் பேசக் கூடிய ஒருவர்
(2) நாற்பது ஐந்து வயதிற்கு உட்பட்ட ஒருவர்
(3) நடிப்பில் அளவில்லா ஆர்வம் கொண்ட ஒருவர்
(4) நாடகத்தில் நடித்த அனுபவம் பெற்ற ஒருவர் ( )

Q32. இந்த விளம்பரத்தைப் பற்றி மேலும் அறிய விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்?

(1) பட்டறையின்போது ஐயங்களைக் கேட்கவேண்டும்
(2) துணை தயாரிப்பாளர்களை அழைக்கவேண்டும்
(3) திரு. ரவியுடன் தொடர்பு கொள்ளவேண்டும்
(4) 15 ஜெண்டிங் சாலைக்கு வரவேண்டும் ( )

Q33. நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுபவர்கள் எவற்றை எதிர்பார்க்கலாம்?

( 4 மதிப்பெண்கள் )

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
__________

**D8 சுயவிடை கருத்தறிதல்**

[Type here]

www.testpapersfree.com



<u>பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.</u>

நீண்ட காலத்திற்கு முன்பு பாக்தாத் நகரில் இரண்டு வியாபாரிகள் இருந்தார்கள். கலீல் மண்ணால் ஜாடிகள் செய்து விற்றான். அமீர் காய்கறி வியாபாரம் செய்து வந்தான். இருவரின் கடைகளும் அடுத்தடுத்து இருந்தன. இருவரும் வாரத்தில் ஒருநாள் பக்கத்து ஊரிலுள்ள சந்தைக்குப் போய் வியாபாரம் செய்தார்கள். எல்லாப் பொருள்களையும் சுமந்துகொண்டு நடந்து செல்ல அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. எனவே, தம் சுமைகளை சுமந்துகொண்டு இருவரும் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை வாங்க முடிவு செய்தார்கள்.

கலீலும் அமீரும் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை மட்டும் வாங்கினார்கள். ஆனால், யாருடைய சாமான்களை முதலில் ஒட்டகத்தின் மீது ஏற்றுவது என்பதில் இருவருக்கும் இடையே தகராறு மூண்டுவிட்டது. கலீல், "நான்தான் முதலில் ஜாடிகளை ஒட்டகத்தின் மீது ஏற்றிக்கொண்டு போவேன் . நீ மெதுவாக வா!" என்றான். அதற்கு அமீர், "என்னுடைய காய்கறிகள் எல்லாம் வாடிப்போய்விடும். அதனால், நான்தான் முதலில் போவேன்" என்று பிடிவாதம் பிடித்தான். இருவரும் விட்டுக்கொடுக்காத தயாராகவில்லை. அவர்கள் நீண்ட நேரம் விவாதம் புரிந்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஆயினும் அதிலும் கலீலுக்கும் அமீருக்கும் உடன்பாடு இல்லை. "ஒட்டகம் யார் பக்கம் கழுத்தை நீட்டுகிறதோ, அவருடைய பொருளைத்தான் ஒட்டகத்தில் முதலில் ஏற்றவேண்டும்!" என்றான் அமீர். "அதெல்லாம் முடியாது. ஒட்டகம் யாருடைய கடை பக்கம் உட்காருகின்றதோ, அவர்தான் முதலில் ஒட்டகத்தைப் பயன்படுத்த முடியும்!" என்றான் கலீல்.

அப்போது ஒட்டகம் அமீருடைய கடை பக்கம் பொய்த்த தனது நீண்ட கழுத்தை நீட்டி அங்கிருந்த காய்கறிகளைத் தின்று தீர்த்தது. பின்னர் உண்ட களைப்பில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஜாடிகள் மீது அமர்ந்தது. அவ்வளவுதான் ஜாடிகள் உடைந்து தூள் தூளாயின. சண்டையிட்டுக்கொண்டிருந்த இருவரும், சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார்கள். ஒட்டகத்தின் செயலைக் கண்டு அவர்கள் இருவரும் தலையிலகையை வைத்து உட்கார்ந்துவிட்டார்கள். தம்முடைய பிடிவாதத்தால் அடைந்த இழப்பை எண்ணி மனம் கலங்கினார்கள். அவர்கள், தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய ஒட்டகத்தை விற்றார்கள். கிடைத்த பணத்தைச் சமமாகப் பிரித்துக்கொண்டார்கள். வியாபாரம் நல்ல

www.testpapersfree.com



நிலைக்கு வந்த பிறகு இரண்டு ஒட்டகங்களை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. கலீலும் அமீரும் எவ்வாறு பணம் சம்பாதித்தார்கள்? (2 மதிப்பெண்கள்)

Q35. வியாபாரிகள் ஏன் ஒட்டகம் வாங்க முடிவுசெய்தார்கள்? (4 மதிப்பெண்கள்)

Q36. அமீருக்கும் கலீலுக்கும் இடையே சச்சரவு ஏற்படக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

Q37 யாருடைய வாதம் நியாயமானது? ஏன்? (2 மதிப்பெண்கள்)

www.testpapersfree.com



Q38. எது வியாபாரிகள் முடிவு எடுப்பதற்குத் தடையாக இருந்தது? ( 3 மதிப்பெண்கள் )

Q39. வியாபாரிகள் எவ்வாறு தம்முடைய பொருள்களை இழந்தார்கள்? ( 3 மதிப்பெண்கள் )

Q40. உன் அண்ணனும் தம்பியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் சண்டையிட்டுக்கொள்கிறார்கள் என்பதை எண்ணி உன் அப்பா வருந்துகிறார். இக்கதையை சுட்டிக்காட்டி உன் அம்மா அவர்களுக்கு கடிதம் எழுதுவதைப் போல கற்பனை செய்து கடிதம் எழுதவும். ( 4 மதிப்பெண்கள் )

அன்புள்ள மகன்களே,

[Type here]

www.testpapersfree.com

# PAPER 8

www.testpapersfree.com

## தொடக்க நிலை 6

| | | |
|---|---|---|
| கே1) 3 | கே11) 2 | கே21) 1 |
| கே2) 1 | கே12) 2 | கே22) 4 |
| கே3) 1 | கே13) 1 | கே23) 2 |
| கே4) 1 | கே14) 4 | கே24) 4 |
| கே5) 4 | கே15) 2 | கே25) 3 |
| கே6) 3 | கே16) 2 | கே26) 4 |
| கே7) 1 | கே17) 1 | கே27) 7 |
| கே8) 4 | கே18) 4 | கே28) 6 |
| கே9) 3 | கே19) 1 | கே29) 1 |
| கே10) 4 | கே20) 3 | கே30) 3 |
| | | கே31) 3 |
| | | கே32) 2 |

www.testpapersfree.com

www.testpapersfree.com

33) நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு 'மாதுரி' நாடகப் புகழ் ரவியுடன் இணைந்து நடிக்கும் ஓர் அரிய வாய்ப்பு கிட்டும். மேலும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இலவச நடிப்புப் பட்டறையில் சேர்ந்து நடிப்பின் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள முடியும். அதன் மூலம் புத்தம் புதிய நாடக தொடரில் நடிக்க வாய்ப்பு கிடைக்கும்.

34) கலீல் மண்ணால் ஆன ஜாடிகளை செய்து விற்றான். அமீர் காய்கறிகளை விற்றான். இதன் மூலம் இருவரும் பணம் சம்பாதித்தனர்.

35) வியாபாரிகள் வாரத்தில் ஒரு நாள் பக்கத்து ஊருக்கு சென்று பொருட்களை விற்றனர். அவ்வாறு பொருட்களை சுமந்துகொண்டு செல்வது இருவருக்கும் சிரமமாக இருந்தது. இதன் காரணமாக சுமந்து செல்ல ஓர் ஒட்டகம் வாங்க முடிவு செய்தனர்.

36) யாருடைய சாமான்களை முதலில் ஒட்டகத்தின் மீது ஏற்றிச் செல்வது என்பதில் இருவருக்கிடையே கருத்து வேறுபாடும் தகராறும் ஏற்பட்டது. இதுவே அமீருக்கும் கலீலுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட காரணம் ஆகும்.

www.testpapersfree.com

www.testpapersfree.com

37) அமீரின் வாதமே நியாயமானது. காரணம் மெதுவாக சென்றால் காய்கறிகள் அனைத்தும் வாடி போய்விடும் என்பதால் ~~காரணத்தினால்~~ ஆகும்.

38) விட்டுக் கொடுக்கும் குணம் இருவரிடமும் இல்லை. இதுவே வியாபாரிகள் முடிவு எடுப்பதற்கு தடையாக இருந்தது.

39) வியாபாரிகள் இருவரும் விவாதம் புரிந்த வேளையில் ஒட்டகம் அமீரின் கூடையில் உள்ள எல்லா காய்கறிகளையும் தின்று தீர்த்தது. அதன் பின் உண்ட களைப்பில் அடுக்கி வைத்த ஜாடிகளின் மீது அமர்ந்து அனைத்தையும் உடைத்தது. ஒட்டகத்தின் இச்செயலால் வியாபாரிகள் தங்களுடைய பொருட்களை இழந்தனர்.

40) இருவருக்கிடையே விட்டுக் கொடுக்கும் குணம் இல்லாவிட்டால், எப்படி இந்த வியாபாரிகள் சண்டையிட்டு இறுதியில் தங்கள் பொருள்களை இழந்து கலங்கி போனார்களோ, அவ்வாறு நீங்களும் கலங்க நேரும். அதனால் முதலிலேயே விட்டுக் கொடுக்கும் நல்ல குணங்களை வளர்த்துக் கொண்டால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவீர்கள்.

www.testpapersfree.com